# ஆய்வுச் சிந்தனைகள்

வரிசை 13 தொகுதி 1

பதிப்பாசிரியர்கள்

வீரா.அழகிரிசாமி

சு.கண்ணன்

ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம்

2014

## நூல் செய்தி

| | |
|---|---|
| நூல் தலைப்பு | ஆய்வுச்சிந்தனைகள் (Aaivu Chinthanaigal)<br>வரிசை 13 தொகுதி - 1 |
| பொருள் | செவ்வியல், சமயம்,<br>மொழியியல், பிற |
| பதிப்பாசிரியர்கள் | வீரா.அழகிரிசாமி, சு.கண்ணன் |
| பதிப்பாலோசனைக்குழு | க.நாகநந்தினி, ஆ.பாப்பா |
| மொழி | தமிழ் |
| அளவு | 1 X 8 வெம்மி |
| எழுத்து | 11 புள்ளி |
| தாள் | மேப்லித்தோ |
| பதிப்பு | முதல் பதிப்பு 24-05-2014 |
| படிகள் | 150 |
| உரிமை | கட்டுரையாளர்கள் |
| **ISBN** | **978-81-923792-8-9** |
| விலை | விற்பனைக்கல்ல (பேராளர்கட்கு மட்டும்) |
| நிகழிடம் | கொங்குநாடு கலைஅறிவியல் கல்லூரி,<br>கோவை. |
| வெளியீடு | ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம், மதுரை.<br>மற்றும்<br>செப்சிரா, 24, பழைய அக்ரஹாரம்,<br>சின்னச்சொக்கிகுளம், மதுரை 625 002. |
| அச்சீடு | ஜோசப் பிரிண்டர்ஸ்<br>61 மெயின்ரோடு, பரவை, மதுரை.<br>செல் : 99946-61194 |
| அட்டை | வீரா.அழகிரிசாமி |

இந்நூலில் இடம்பெறும் கட்டுரைக்கருத்து அந்தந்தக் கட்டுரையாளர்களுடையது.

39. ஔவையின் உயிர்ப்புச் சூழலியல் சிந்தனை - சு. பூங்கொடி 190

40. பண்பாட்டியல் நோக்கில் உலகப் பொதுமறையும் குறிஞ்சிப்பாட்டும் - மு.நாகராஜன் 196

41. "கீழ்க்கணக்கு அகநூற்பனுவல்களில் மருதத் திணைச் சார்ந்தப்பதிவுகள்" - மு.ஐயப்பன் 201

42. ஔவையார் புறப்பாடல்களில் பெண்நிலைப் பதிவுகள் - சிந்து.மூ 205

43. புறநானூற்றில் வானவியல் - மா.சிலம்பரசன் 210

44. சங்கப் பெண் புலவர்களும் சூழலியல் பெண்ணியமும் - அனுராதா 215

45. திருவிருத்தத்தில் சங்க இலக்கியத்தாக்கம் - ரா.மகேஸ்வரி 220

46. பதினெண் கீழ்க்கணக்கில் மானிடவியல் பதிவுகள் - த.கருப்பையா 225

47. சைவத் திருமுறைகளில் அருள் - ப.சி.குருசண்முகாம்பாள் 231

48. அற்புதத்தின் அற்புதம் காரைக்காலம்மையார் - பெ.கிருஷ்ணவேணி 236

49. வைணவமும் சீக்கியமும் - ஒற்றுமைகளும் வேறுபாடுகளும் - சோ.கி.கல்யாணி 239

50. மூவர் தேவாரத்தில் மூவகைக் கற்பனைகள் - சு.சதீஷ்குமார் 244

51. நம்மாழ்வாரும் இராமலிங்க அடிகளாரும் - ஜெ.செல்வம் 249

52. சண்டேசுவரர் - ஓர் பார்வை - கிளி மொழி 254

53. சிலம்பில் சமண ஏற்பும் - பௌத்த மறுப்பும் - க.முருகேசன் 258

54. எழுத்ததிகாரத்தில் இளம்பூரணர் உரைத்திறன் - க.பழனிவேல் 263

55. பரணர் பாடல்களில் இயற்கை - த.பூங்கோதை 268

56. சிலம்பில் எண் 'மூன்று' பெறும் சிறப்பு - வி.சுகந்தா 273

57. கருவூர்ப்புராணத்தில் கருவூர்த்தேவர் - ச.பத்மினி 278

58. திணைமொழி ஐம்பதில் ஐந்நிலப்பின்னணி - இரா.மணிமேகலை 283

59. உமர்கய்யாம் பாடல்களில் உடல் தத்துவம் - மா.கருணாகரன் 288

54

# எழுத்ததிகாரத்தில் இளம்பூரணர் உரைத்திறன்

'உள்ள உரைகளில் உயர்ந்த பொருள்
தெளிவு பூரண் உரை'

என்ற கூற்றினை மனத்தில் கொண்டு, தமிழர் தம் பழம்பெரும் கலைச் செல்வங்களின் சேமநிதியான தொல்காப்பியத்தை அறிந்து கொள்வதற்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய உரையாசிரியர் இளம்பூரணரின் உரைத்திறன் பற்றி விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இளம்பூரணர் பற்றிய அறிமுகம்**

இவர் இயற்பெயர் பூரணர். இளம்வயதில் துறவு பூண்ட காரணத்தால் இளம்பூரண அடிகள் என்று பெயர் பெற்றார். இவர் காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டு. இவர் சோழ நாட்டவர் என்பதை இவர் தரும் சான்றுகள் மூலம் அறியலாம். இவர் பின்பற்றிய சமயம் பற்றி இருவேறுபட்ட கருத்துக்கள் உண்டு. ஒருசாரார் சமணம் என்றும் மற்றொரு சாரார் சைவம் என்றும் உரைப்பர்.

இளம்பூரணர் உரையை முதன்முதலில் புதுப்பித்து வெளியிட்டு உதவியவர்கள் பூவிருந்தவல்லி திரு. சு. கன்னியப்ப முதலியார். இப்பதிப்பு திரு. சுப்பராய செட்டியாரால் பரிசோதிக்கப் பெற்று கி. பி. 1868இல் வெளிவந்தது.

**உரை இயல்பு**

- நூற்பாவிற்கு ஏற்ற உரையெழுதி அமையும் கருத்துரை.
- உரையாசிரியர்கள் நூலாசிரியனுக்குப்பின் தங்காலம் வரை வந்த வழக்காறுகளை ஏற்ற இடத்தில் தந்து முடிக்கும் இயல்புரை.
- உரையாசிரியர்கள் கால வயப்பட்டும் புதிய கொள்கைகளை ஏற்றிக்கூறும் காலவுரை.

உரையைத் தொடங்கும்போது ஒவ்வோர் ஆசிரியனும் தமக்கு உவந்தமுறையிலேயே தொடங்கி எழுதி வந்தனர். அவ்வாறு இவர் உரை செய்யுமுன் பாயிரம் செய்துவிட்டு, எழுத்ததிகாரத்திற்கு உரையெழுதும் முன்பு **"இவ்வோத்து என்ன பெயர்த்ததோ வெனின்"** என்று கூறி, தலைச்சூத்திரம் விளக்கும் முன்பு **"இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றே வெனின்"** என்று வினாயெழுப்பி அதற்கு கருத்துரை எழுதி, உரை கூறி, சான்று காட்டிப் பலவகையில் விளக்கி, **"என்று நுதலிற்று, உணர்த்திற்று"** என்று கூறி முடிக்கிறார். இம்முறையை எல்லா சூத்திரங்களுக்கும் பின்பற்றுகிறார்.

*க.பழனிவேல், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்), கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 641 029.*